# ஞான ஒளி 2007




இந்து மாணவர் மன்றம்
சென். ஜோண்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

# ஞான ஒளி

# 2007

## இந்து மாணவர் மன்றம்
## சென். ஜோன்ஸ் கல்லூரி
## யாழ்ப்பாணம்.

# இந்துமன்றம் - 2007



நிற்பவர்கள்: இடமிருந்து வலம்:

கு. சுதாகர், கு. விஸ்வரூபன், சி. சிவமித்திரன், ம. சுமந்திரன், ப. ராம்ராஜ், உ. தனஞ்சயன், சி. ஜவிதன்
இ. கஜானன், செ. விஷ்வநாத், உ. நிரோசன், சி. பிரசாந்

அமர்ந்திருப்போர்: இடமிருந்து வலம்:

ம. கஜீவ்ராஜ், க. சிவச்செல்வன், செ. பார்த்தீபன் (செயலர்) வே. யுகபாலசிங்கம் (உபபோசகர்)
வண. ந.ஜே. ஞானப்பொன்ராஜா (அதிபர்), ச. கார்த்திக் ( தலைவர்), செ. கோகுலன், க. கௌரிசங்கர்

## ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குமஹா சந்நிதானம்

அவர்களின்

## அருளாசிச் செய்தி

அன்பு சார் பெருந்தகையீர் :-

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் இந்து மன்றம் தனது வெளியீடான ''ஞான ஒளி'' வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். மாணவர் சமுதாயத்தின் அறிவினாலும் ஆற்றலினாலும் வெளிக்கொணரும் விதத்தில் வெளிவருவது ''ஞான ஒளி'' ஆகும். அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதே கல்வி ஆகும். இக்கல்வியை நிறைவாக கற்றுக் கொள்ளுமிடமே பாடசாலை. மனித வாழ்வை இக்காலமே உயர் நிலைக்கு அழைத்து செல்வது சமயமாகும். அன்பையே அடையாளமாக கொண்ட சமயம் இறைவனுடைய செயற்பாட்டை வெளிப்படுத்தவே வழியாட்டு முறைகளை கொண்டுள்ளது. இதை உணர்வதே இந்து சமயமாகும். இந்து சமய தத்துவங்கள் அனைத்தும் வாழ்க்கை நெறியை வெளிப்படையாகக் காட்டுகிறது. இதனையே எமது சமயம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எனக் கூறுகிறத. இதனை உணர்ந்த சென் ஜோண்ஸ் கல்லூரி மாணவர்கள் பாடசாலையில் இந்து சமய மன்றம் அமைத்து புனிதப்படுத்துவது எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகிறது. இவ்வருடம் மன்றத்தினால் கலைமகளுக்கு விழா எடுத்து ஞான ஒளி சஞ்சிகை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மாணவர்கள் அன்பும் அருளோடும் நிறைவாக வாழவும், நெறிப்படுத்தும் அதிபர், ஆசிரியர்களையும் இறைவன் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம்.

**''என்றும் வேண்டும் இன்ப அன்பு''**

*இரண்டாவது குருமஹா சந்நிதானம்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த*
*பரமாசாரிய ஸ்வாமிகள்*

## CHURCH OF CEYLON - DIOCESE OF COLOMBO
## ARCHDEACONRY OF JAFFNA

எனது அன்பான பிள்ளைகளே,

தங்களின் இந்து மன்றத்தினால் வாணி விழாவின் போது வெளியிடவிருக்கும் ''ஞான ஒளி'' சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்க கேட்டதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

''ஞான ஒளி'' என்ற வார்த்தை இறைவனிடமிருந்து பெறப்படும் மேலான அறிவினை, ஒளியைக் குறித்து நிற்கின்றது. ஒளி ஏற்படும் போது இருளானது அகன்று போகிறது. அறியாமை என்ற இருளை நீக்குவதற்கு ''ஞான ஒளி'' இன்று தேவையாயிருக்கிறது. ஞானம் என்பது தனித்தே அறிவை மாத்திரம் கொண்டதல்ல. இறை அறிவை, ஒழுக்க அறிவை, உலக அறிவை, மனித அறிவிற்கு மேலான அறிவை உள்வாங்கி நிற்கின்றது.

இறைவன் ஒரே உருவமுடைய தாவரங்களை படைக்கவில்லை. பல வடிவமுடையதாக புல், செடி, கொடி, மரமெனப் படைத்தான். அதே வண்ணம் ஒரே வடிவமுடைய மலர்களையோ, கனிகளையோ படைக்கவில்லை. பலவடிவங்களிலே மலர்களையும் கனிகளையும் படைத்தான். அதே வண்ணம் ஒரே நிறத்தில் எல்லா மலர்களையும் கனிகளையும் படைக்கவில்லை. பல வண்ணங்களிலே உருவாக்கியுமுள்ளான். இவை எல்லாம் இறைவனின் படைப்புக்கு எவ்வளவு அழகைக் கொடுக்கின்றது. இவை அனேக உண்மைகளை இவ்வுலகிலே எமக்குக் கற்றுக் கொடுக்கின்றது. இந்த மேலான உண்மைகளை கண்டு பல் சூழல் மத கலாச்சார உலகிலே அன்பு ஒற்றுமை சமாதானம் ஆகிய உயர் பண்புகளுடன் வாழுவோமாக.

இன்றைய அனேக மாணவர்கள் இறைமார்க்கத்தில் அக்கறை, விருப்பு அற்றவர்களாக மாறிவரும் காலத்தில் சென். ஜோண்ஸ் மாணவர்களாகிய நீங்கள் உங்கள் இறை நம்பிக்கையில் உறுதியாக இருப்பதையிட்டு மகிழ்சிசியடைகிறேன். இறை நம்பிக்கை ஒரு மாணவனை தன்நம்பிக்கையிலும், ஒழுக்கத்திலும் சிறந்த பண்புடன் கூடிய கல்வியிலும் வழிநடத்துகிறது.

உங்களின் விழா சிறப்புற வாழ்த்துவதோடு நீங்கள் வெளியிடும் ''ஞான ஒளி'' சஞ்சிகை அனேகருடைய அறியாமையாகிய இருளை அகற்றி மெய்யான ஒளியை ஏற்றும் வண்ணம் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்.

வணபிதா.செ.பி. நேசகுமார்
யாழ். குருமுதல்வர்.

*St. John's Vicarage*
*452, Main Street, Chundikuli*
*Jaffna, Sri Lanka.*

# செண். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் அவர்களின் ஆசிகள்

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் "

என்பது அமுத வாக்கு மானிடன் ஒருவன் பண்புகெட்டவனாய், மனிதம், மனிதநேயம் உள்ளவனாய் உலகம் போற்றத் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க முயன்றால் சிந்தைவிழைந்தால் அவன் பேணவேண்டியது போற்ற வேண்டியது யாதெனில் அது ஒழுக்க நெறியாகும்.

ஒழுக்க நெறி, ஒழுக்க விழுமியங்கள் என்பன மனிதனிடம் இயல்பாகவும் அன்றேல் இயன்ற நல்ல பயிற்சியாலும் கடைப்பிடிக்கலாம். இத்தகைய ஒழுக்க சீலத்தை ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்கப், போற்றப், பயிற்சி செய்ய ஏற்ற ஒரு பருவம் அல்லது களம் மாணவப் பருவமே ஆகும்.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்"

என்பதற்கமைய ஒருவனது பண்பை ஒழுக்கத்தை அவனிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகள் சொற்கள் சான்று பகர்ந்து நிற்கும் காரணம் "இனியன கூறாது இன்னாத கூறல் கனியிருக்கக் காய் கவர்வது போல் ஆகும் என்பதாகும்".

எனவே எதிர்காலத்தில் சமூகம் விரும்பும் அன்றேல் சமூகத்தை வாழவைக்கும் ஒரு மனிதனாக, தலைவனாக வரப் போகின்றவன் , திகழப் போகின்றவன். இன்றைய மாணவனும் மாணவ சமுதாயமும் தான்.

இம்மாணவப் பருவத்தில் பெறுகின்ற பயிற்சிகள் எல்லாம் உயர்ந்த, சீரிய, உன்னதமான பயிற்சிதான் ஒழுக்கநெறிக் கல்வியாகும். இவ்வொழுக்க நெறிக்கு இலகுவாக வித்திட்டுக் கொடுக்கும் நல்ல வாழ்வு நெறிதான் சமயம் என்ற சன்மார்க்க நெறி ஆகும்.

மாணவர்கள் தமது கற்கைக் காலத்தில் பெறும் அறிவினூடாக ஆன்மீகத்தையும் அறிந்து போற்றி வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது தான் சமயம் இவ்வாறு மாணவனது உள்ளம் பௌதீக அறிவுடன் ஆன்மீகன அறிவையும் இணைத்து ஏற்று வாழக் கற்குமேயானால் கற்றதனாலாய பனனைப் பெறுவதும், அதனால் பண்பும் பயனும், அன்பும் அறனும், கொண்ட ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பி அதன் வழி சாந்தியும் சமாதானமும் நிலைக்க பாதை சமைக்கும் என்பது திண்ணம்.

ஆதலால் அறிவு வழிநின்று அதன் பயனாக பிரகாசிக்க விரும்பிக் கல்லூரி இந்து மாணவர்கள் "ஞான ஒளி" என்ற இந்தச் சஞ்சிகையை காலகாலம் நவராத்திரி வழிபாட்டின் போது வெளியிட்டு வருகின்றனர். மாணவர்களின் நன்முயற்சி பயனளிக்க நல் ஒழுக்க நெறி என்னும் ஞான ஒளி உலகெங்கும் பிரகாசிக்க வாழ்த்தி பாராட்டி நிற்கும் உங்கள் தந்தை.

*அருட்தந்தை*
*N.J. ஞானப்பொன்ராஜா*
*அதிபர்.*

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# பொறுப்பாசிரியரின் அர்ப்பணிப்பு

எங்கள் கல்வித் தெய்வமாம் கலை மகளுக்கு விழாக் காணும் இத்திரு நாளில், "ஞான ஒளி" சஞ்சிகை வெளிவருவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எமது கல்லூரி இந்து மன்றத்தின் திருப்பணிகளில் இதுவும் ஒன்று. மலர் மாணவர்களின ஆக்க முயற்சி களாகவே மலர வேண்டும் என்ற எமது இலக்குக்கு அமைய வெளிவருவது பாராட்டுக்குரியது.

மன்றத்தின் முக்கிய பணி ஆன்மீக உணர்வைப் பேணுதல், அதனூடாகத் தார்மீகச் சிந்தனையை வளர்த்தல், நேர்மை, வாய்மை, கீழ்ப்படிதல் சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, நட்புணர்வு, விட்டுக் கொடுத் தல் போன்ற ஒழுக்கப்பண்புகளை இனங்காட்டி, அவற்றைக் கடைப் பிடித்தொழுக உதவுதல். இதற்காகவே மாணவர்களிடையே சைவநெறி சார்ந்த போட்டிகளை நடாத்தி வாணிவிழாவின்போது பரிசில்களை வழங்கி வருகின்றோம்.

இன்றைய சூழலில் மாணவர்கள் இவற்றைக் கல்வியாய் அறிதல் அவசியம் என்பதற்காக ஒவ்வொரு புதன்கிழமையிலும், சைவமாணவர்கள் அழகிய பெரிய மண்டபத்தில் ஒன்று கூடி ஒலி, ஒளி, வசதிகளுடன், கூட்டுப்பிரார்த்தனை கருத்தரங்குகள், கருத்துரைகளை நடாத்திவரக் கல்லூரித்தாய் வாய்ப்பளித்துள்ளாள். அதன் சீர்மை குன்றாது தாராள மனத்தைத் தளர்வடையச் செய்யாது என்றும் பேணுவது எமது கடன்.

தொடர்ந்து மன்றத்தினரின் ஆக்கபூர்வமான பணிகள் செவ்வனே நடைபெற எமது அதிபர், உப அதிபர்கள், மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள் எவ்வித பேதமுமின்றி அளித்துவரும் ஒத்துழைப்புக்கள் பெருமைக்குரியது. மன்றத்தின் பணிகளைத் தடையின்றி ஆற்ற கல்விசாரா ஊழியர்கள் தரும் ஒத்துழைப்புக்களை இங்கு நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

நிறைவாக, வாணிவிழாவை முன்னிட்டு இவ்வாக்க முயற்சிகளுக்கு விருப்போடும், பொறுப்போடும் முன்னின்று உழைத்த மன்றத்தின் மாண

வர்கள், ஆசிரியர்கள், மலர்சிறப்பாக மலர ஆசியுரைகளை வழங்கிய குருமகாசந்நிதானம், ஆதீனகர்த்தா, நல்லை ஞானசம்பந்த ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாச்சாரீய சுவாமிகள் அவர்கள், இலங்கை கிறிஸ்தவ திருச்சபை யாழ்ப்பாணம் குரு முதல்வர் S. P. நேசகுமார் அவர்கள், எமது அதிபர் அவர்கள், அனைவருக்கும் முதற்கண் மன்றத்தின் உப காப்பாளர் என்ற நிலையில் பணிவோடு நன்றிகளை அர்ப்பணிக்கின்றேன்.

நன்றி.

திரு. வே. யுகபாலசிங்கம்
மன்ற உப-காப்பாளர்.

## தலைவரின் பாராட்டுரை

புகழ்பூத்த சென்ஜோண்ஸ் கல்லூரி இந்துமன்றத்தின் நீண்ட காலக்கனவாக இருந்துவந்த "ஞான ஒளி" சஞ்சிகையின் மூன்றாவது மலரை இவ்வருடம் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய மதமான எமது இந்துமன்றத்தின் தொன்மையும் மேன்மையும் பிரதிபலிக்கும் முகமாக கால் நூற்றாண்டையும் தாண்டி இந்து மன்றம் வெற்றிகரமாக செயற் படுகின்றது என்பதை தெரிவிப்பதில் தலைவர் என்ற வகையில் நிறைவடைகின்றேன்.

எமது மலரான "ஞான ஒளி" சஞ்சிகை, எமது மாணவர்களின் சொந்த ஆன்மீக சம்பந்தமான ஆக்கங்களை தன்னகத்தே சுமந்து வருகிறது.

இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண. செ. பி. நேசகுமார் (யாழ். குருமுதல்வர்) எமது அதிபர் அவர்களுக்கும் முதற்கண் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். இதேபோல் எமது மன்றத்தின் பொறுப்பாசிரியருக்கும் ஆசிரியர்களுக்கும் ஆக்கங்களைத் கொடுத்து உதவிய மன்ற உறுப்பினர்கள் மற்றும் சக மாணவர்களுக்கும் எமது சிரந்தாழ்த்திய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது இந்து மாமன்றம் மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு, காலத்தால் அழியாது புகழ் பூத்த மன்றமாக திகழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ச. கார்த்திக்
தலைவர் இந்து மாணவர் மன்றம்.

## செயலாளரின் மனதிலிருந்து....

எமது மன்றத்தினால் ''ஞான ஒளி'' என்ற சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு இந்து மன்ற செயலாளர் என்ற வகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த சஞ்சிகையானது சைவசமயத்தையும் சைவசமயம் காட்டும் உயர்ந்த நெறிகளையும் பரப்ப எடுக்கும் முயற்சிகளின் ஆரம்பமாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக இயங்கும் மன்றம் எமது இந்து மன்றமே ஆகும். இந்த வகையில் இவ்வாணி விழாவில் வெளியிடப்படும் ''ஞான ஒளி'' என்ற சஞ்சிகை உங்களுடைய வரவேற்பை பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இச் சஞ்சிகை வெளியிடுவதற்காக அர்ப்பணிப்புடன் உழைத்த பத்திராதிபர்களான சி. ஜவிதன், க. கௌரிசங்கர் ஆகியோருக்கு செயலாளர் என்ற வகையில் என்னுடைய உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இச் சஞ்சிகை தொடர்பாக எம்மை வழிப்படுத்தி சிறந்த ஆலோசனைகளை வழங்கிய எமது மன்ற பொறுப் பாசிரியர்களான திரு. வே. யுகபாலசிங்கம் ஆசிரியர், ம. சிறிஸ்கந்தராஜா அவர்கள், திரு. செ. காசிநாதன் அவர்க்ளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இச்சஞ்சிகை வெளியிடுவதற்கு பலவழிகளிலும் வசதிகளைச் செய்து தந்த அதிபர் அவர்களுக்கும் மலருக்கு ஆசியுரை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வண. செ. பி. நேசகுமார் யாழ். குரு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இச் சஞ்சிகை சிறப்புற வெளிவர உதவிய இந்துமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் இம்மலரை அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த அன்னை பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

**செ. பார்த்தீபன்**
செயலாளர்
(இந்து மன்றம்)

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து....

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் சரஸ்வதி, வீணை செய்யும் ஒலியுடன் வீற்றிருப்பாள், பொன்னான கலைகளின் பிறப்பிடமாக இருப்பாள். ஆய கலைகள் அறுபத்துநான்கினையும், தன்னுள் அடக்கி நின்று அருளிப்பாள் வாணி.

அறிவின் ஆதாரமாகிய வாணிக்கு இந்த ஆண்டு வாணி விழாவின் போது வெளியிடப்படும் ''ஞான ஒளி'' எனும் சஞ்சிகையின் இதழாசிரியர்கள் என்ற வகையில் இம்மலர் வெளிவர உதவிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வியின் பிறப்பிடமாகிய அறிவொளி பரப்பும் அன்னையின் வாணி விழாவிலே ''ஞான ஒளி'' மலரினை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு எமக்கு ஆசியரை நல்கி உதவிபுரிந்த பொறுப்பாசிரியர் அவர்களுக்கும், எமது இந்து மன்றத் தினருக்கும் ஆக்கங்கள் தந்துதவிய யாவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலாக, எதிர் வரும் ஆண்டுகளில் இச் சஞ்சிகையானது மேலும் சிறப்புற்று வெளிவர அனைத்து மாணவர்களும் தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

*இதழாசிரியர்கள்:*

சி. ஜவிதன்
க. கௌரிசங்கர்
(இந்து மன்றம்.)

# சமயச் சின்னங்கள்

திருநீறு உருத்திராக்கம் எனபன சிவசின்னங்களாகும்.

## திருநீறு

திருநீறு சைவசமயத்தின் சிறப்புப் பிரசாதம். இது சமயத்தின் தோற்ற ஒழுக்கமுறையுண்மைகளும் கிரமத் தத்துவங்கட்கும், முப்பொருள் உண் மைக்கும் அறிகுறியாயமைவது. மூன்று விரல்களால் இடப்படும் திருநீற்றின் மூன்று கோடுகளும் சிந்தனை, சொல், செயல் என்ற திரிசத்தியங்க்ளைக் கூறுகின்றது. முடிவில் யாவரும் ஒரு பிடிசாம்பல் ஆவர் என்ற நிலையான உண்மையை திருநீறு உணர்த்துகின்றது. மேலும் தூய்மையாகவும் ஞான ஒளியுடையதுமாக இருத்தல் வேண்டும் என்பதையும் காட்டுகின்றது.

பசுவின் (ஜீவனின்) மலமாம் ''ஆணவம், கன்மம், மாயை'' என்ற மூன்றும் தீயில் (ஞானத்தீயில்) நீறுகின்றன என்ற தத்துவத்தையும இது வெளிப்படுத்துகின்றது. இக்கருத்தை ஒட்டியே சம்பந்தப் பெருமான்,

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

என அருளியுள்ளார் ''நீறில்லா நெற்றி பாழ்'' என்பது பழமொழி சாணம் அசுத்தங்களையும் நோய்க் கிருமிகளையும் அகற்றுவதை யாவரும் அறிவர். சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறு தலையிலுள்ள நீர்க்கட்டு, தலை வலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்றவல்லது. ஆதலால காலையிலும் மாலையிலும் குளித்தவுடனும், பூசை ஆலய வழிபாடுகளுக்கு முன்னும், சாப்பாட்டுக்கு முன்னும், விபூதி அணிதல் வேண்டும். வடக்கு முகமாகவோ, கிழக்கு முகமாகவோ அண்ணாந்து ''சிவ சிவ'' என்று சொல்லிக்கொண்டு அணியவேண்டும். விபூதிக்கு இரட்சை, சாரம், பசிதம் என்பன மறுபெயர்களாகும்.

**உருத்திராக்கம்**

உருத்திர + அக்கம் = உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானுடைய திருநேத்திரங்களில் தோன்றிய கண்மணிகள் என்பது பொருள். திரிபுரத்து அசுரர் செய்த கொடுமைகளைத் தேவர்கள் சிவபெருமானிடம் கூறியபோது அவரது திருநேத்திரங்களிலிருந்து ஒழுகிய நீர்த்துளிகள்.

இது சிவசின்னம். இதனை கண்மணிமாலை, திருஅடையாள மாலை, அக்குமணி என்றெல்லாம் மொழிவர். அக்குமாலை இறைவன் தன் பக்தர்கள் மீது வைத்த கருணையால் அவர்களுக்கு எதிரிகள் கொடுக்கும் துன்பங்களை நினைத்து வடித்த கண்ணீரின் தொகுப்பு. திரவநிலையிலிருந்து திடமான அமைப்பாய் அக்குமணி ஆனதென்பர்.

இதில் மின்சார சக்தி இருப்பதைப் பெரிதாக வல்லுனர்கள் கண்டிருக் கின்றனர். நல்ல உருத்திராக்கம் பசும்பொன்னின்நிறத்தை ஒத்திதருப்பதை அறியலாம். இது சிவபெருமானது அருளைக் குறிப்பதால் மாலையாக அணிந்து செபித்தால் தெய்வசக்தி வளரும். உருத்திராக்கம் உடலில் அணி வதால் இரத்தக் கொதிப்பு முதலிய நோய்கள் நீங்கும்.

“ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு”

*ஆக்கம்:*

அ. பிருந்துஜன் (8 A)

# தண்டியடிகள் நாயனார்

திருவாரூரில் பிறந்தவர்கள் யாவருமே வழிபடுதற்கு உரியவர்கள். அதனால் தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "திருவாரூர் பிறந்தார்கள் எல் லோருக்கும் அடியேன்" என்று பாடினார். அத்தகைய பேறுபெற்றவர்களுள் ஒருவராகிய தண்டியடிகள் நாயனார் புறக்கண் இல்லாதவராயினும் அகக் கண்ணில் எப்போதும் இறைவன் திருவடியைக் கண்டு இன்புறும் இயல்பு பெற்றிருந்தவர். நாள்தோறும் ஆரூர் எம்பெருமானை வணங்கி பஞ்சாட்சரத்தை செபித்துக்கொண்டே சென்றுவந்தார்.

கோயிலின் மேற்கே உள்ள குளத்தைச் சுற்றி அக்காலத்தில் மடங்களைக் கட்டிக்கொண்டார்கள். அக்குளத்தின் அளவு குறுகிக்கொண்டே வந்தது. அதனை அறிந்த தண்டியடிகள் நாயனார் இந்தத் திருக்குளத்தை அகழ்ந்து பெருக்கச் செய்யவேண்டும் என முடிவுசெய்து அதற்கு ஆனவற்றை செய்யத்தொடங்கினார். ஆங்காங்கே அடையாள முளைநட்டுக் கயிறு கட்டி நடுஇடத்தை கையாலே தடவிப்பார்த்து மண்வெட்டியால் வெட்டி மண்ணை புறத்தே கொட்டி மறுபடியும் வெட்டுவார். இத் தொண்டு செய்யும்போது திருவைந்தெழுத்தை சொல்லிக்கொண்டே இருந்தார். அவர் அக்குளத்தின் அளவை பெருப்பிக்கும் பொருட்டு அகழ்வதைக் கண்ட சமணர்களுக்கு அவர் செயல் பொறுக்கவில்லை. அவரை அணுகி "மண்ணை அகழ்ந்தால் இங்குள்ள பிராணிகள் இறந்துவிடும் அவற்றை துன்புறுத்த வேண்டாம்" என்றார்கள்.

அது கேட்ட தண்டியடிகள் உண்மை அறியாதவர்களே, திருநீற்றை சாந்தாகப் பூணும் எம்பெருமானுக்கு உரிய திருப்பணி அல்லவா இது? இது மிகச்சிறந்த அறமென்பதை நீங்கள் அறிய முடியுமா? என்றார். அதனைக் கேட்ட சமணர் நாங்கள் எடுத்துச் சொல்லும் தருமத்தை நீ காதில் வாங்கிக் கொள்ளவில்லை காதையும் இழந்தாயோ? என்று கேட்க தண்டியடிகள் மந்தமான அறிவும், காணாத கண்ணும், கேளாத செவியும் உங்களுக்குத்தான் உள்ளன. நான் இறைவன் திருவடிகளையே காண்கின்றேன் அன்றி மற்றவற்றை காண்பதில்லை. மற்றவர்களைப்போல் நான் எல்லாப்பொருள்களையும் காணவல்லேன். ஆனால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டார்?

அதைக்கேட்ட சமணர்கள் உன்னுடைய கடவுள் அருளால் நீ கண் பெற்றாயானால் நாங்கள் இந்த ஊரில் இராமல் ஓடிப்போகிறோம் என்று சொல்லி அவர் கையில் இருந்த மண்வெட்டியைப் பறித்துக்கொண்டு முளைகளையும் கயிற்றையும் எடுத்து எறிந்தார்கள்.

# கந்தசஷ்டி மகிமை

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உணவு எப்படி அவசியமோ, அதேபோன்று உயிரைப் பாதுகாப்பதற்கு இறைவழிபாடு மிகமிக முக்கியமானதாகும். சிறந்த மூர்த்தி கலியுக வரதனாகிய சுப்பிரமணியப் பெருமான் ஆவார். முருகனை வழிபடுவதனால் அனைத்துப் பயன்களையும் பெற்றக்கொள்ளலாம். எதிரிகளையும் வாழவைப்பவன். தீயவர்களையும் ஒழுக்கமற்றவர்களையும் நல்வழிப்படுத்துபவன். தீராத நோய்கள் தீர்ப்பவன். பூதபைசாசங்களையும் விரட்டிக் காக்கும் மந்திரமணி, பேசாதவரைப் பேசவைக்கும் மூலிகை, கண்ணில்லாதவர்க்கும் கண்ணளிக்கும் ஞானதீபம்.

கலியுகவரதனாம் முருகப் பெருமானின் புண்ணிய விரதங்களில் மிகவும் சிறப்பானதும் மகிமையானதுமான முக்கிய விரதம் கந்தசஷ்டியாகும். சூரபத்மன் ஆயிரத்து எட்டு அண்டங்களையும், நூற்றெட்டு யுகம் ஆண்டு அனுபவிக்க வரம் கொடுத்தவர் சிவபெருமான். அந்த நன்றியை மறந்து முருகப் பெருமானுடன் பெரும்போர் செய்கிறான் சூரன். ஆறுநாள் போர் நடந்தது. பகைவனாகிய சூரனை அழிக்க முருகன் திருவுளம் கொள்ள வில்லை. ஓராறு திருமுகங்களுடனும், ஈராறு திருக்கரங்களுடனும் வேற்படையுடனும், வீரவாகுதேவர் முதலிய இலக்கத் தொன்பதின்மர், ஈராயிம் பூதவெள்ளங்கள் ஆகிய படைக் கலங்களுடனும் எழுந்தருளி கோலமாமஞ்ஞை தன்னிற் குலவிய பாலனாகிய குமரன் மாயப்போர் செய்த ஆணவமலமாகிய சூரனை அடக்கி அருளியது தான் சூரசங்காரம். கொடிய பகைவனாகிய சூரனை அழிக்காமல் அடியனாகிய திருவருளைப் போற்ற வேண்டும்.

எங்ளது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட திருவிளையாடலே கந்தவேளுக்கும், அசுரப் படைக்கும் நடந்த சூரசங்காரம் பிரபஞ்சவாழ்வு ஒரு போராட்டம். ஒவ்வொருவர் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்புக்கும், அசுர இயல்புக்கும் இடையில் இடையறாத போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. காமம், குரோதம், கோபம், மோகம், மதம் போன்ற தீய பகைவர்களே அசுரப்படைகள். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று அஞ்ஞான இருளே சூரன், சிங்கன், தாரகன் ஆகியோர். இத்தீமைகளையும் இருள்மயமான அசுர இயல்புகளையும் ''ஞானம்'' என்ற

வேலாயுதத்தால் பிளந்து நாம் விடுதலையடைய வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் செயல்வடிவமே கந்தசஷ்டி நாட்களில் நடந்த போரும் சூரசங்காரமும்.

குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் கந்தசஷ்டி விழாவினைப் பற்றிய குறிப்பு உள்ளது.

எனவே, திருமுருக வழிபாடு வேதகாலம் முதல் கொண்டு நிகழ்ந்து வருகின்றது என்பது மறுக்க வொண்ணா உண்மையாகும். முருகன் அழகு, அறிவு, வீரம் ஆகிய மூன்று தன்மைக்கும் எடுத்துக் காட்டாகத் திழ்பவன். சிவகுமாரனாம் முருகனே பிரணவம் முருகன் திருநாமத்தினைக் காதலாகிக் கண்ணீர்மல்கி ஓதிவர, உற்றதுயர் தீரும், பேய் பசாசங்கள் ஓடும், பாவப்பிணி அகலும், பகைவர் நாசமாவர், பாதமும் தண்டனையும் தெரியும், பிறவாப் பேரின்பநிலை யெய்தும் தன்னைத் தியானிப்பவர் யாவராயினும் இன் முகத்துடன் வரமீந்தருளும் கருணைக்கடல், வைதாரையும் வாழவைக்கும் வள்ளல்.

இவ்விரத காலத்திலேயே தேவராய சுவாமிகள் அருளிய ஆறுபடை வீடுகளுக்குரிய கந்தசஷ்டி கவசத்தினை ஓதி அவனருள் பெறவேண்டும். இவ்வாறு தன்னகத்தே பல சிறப்பம்சங்களைக் கொண்டு கந்தசஷ்டி விரதம் விளங்குகின்றது.

நன்றி.

செ. பார்த்திபன்
13 உயர்தரம் கலைப் பிரிவு.

# சைவ வாழ்வு

"வான்முகில் வளாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன் கோன்முறை அரசசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்" என்பது சேக்கிழாரின் பெரிய புராணம்.

சேக்கிழார் கூறியது போன்று நல்ல மழைவளமும், மண்வளமும், அரசநீதியும், துன்பமில்லாவாழ்வும், அறமும், வேதமும், வேள்வியும், உயரப்பெற்று உலகம் ஓங்க நாம் சைவவாழ்வைப் போற்ற வேண்டும்.

சைவம் என்பது சிவசம்பந்தமுடையது. வாழ்வு என்பது ஒழுங்கு முறையாய் வாழ்வாங்கு வாழ்வதாய் அமைவது. நாமும் ஒழுங்குமுறையாய் வாழ்வாங்கு சைவவாழ்வைக் கடைப்பிடிப்போமாயின் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

சைவம் கூறும் வாழ்வுதான் என்னே? வேதங்கள், ஆகமங்கள் உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், சாத்திரங்கள் என்னும் நெறியின் வழியில், மார்க்கத்தில் நாம் ஒவ்வொருவரும் எமக்கு ஏற்றவழி நின்று அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து என்ற உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயனுக்கமைய ஏகமாயும் அநேகமாயும், எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்து நிற்கும் எம்சிவனை இறைவனை இடையறாது போற்ற வேண்டுமென்பதேயாகும்.

வைச அருளாளர்களும் இதனையே தம்வாழ்வாகக் கொண்டு நமக்கு வாழ்ந்து காட்டினர். நால்வேதங்களாயினும் சரி, நாற்பாதங் களாயினும் சரி பண்டிகைகள் விரதங்கள் என்பனவாயினும் சரி நமது வாழ்வு எங்ஙனம் சைவவாழ்வாக அமைய வேண்டும் என்பதையே பொருளாக விளக்கி நிற்கின்றன.

எடுத்துக்காட்டாக நாவலர் பெருமான் விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் மனம் பொறி வழிபோகாது நிற்றற்பொருட்டு இவ்வாறே எவன் ஒருவன் பிறர் வாழவேண்டும் என்கின்ற எண்ணத்தை எப்போது எண்ணுகின்றானோ அன்றே அவன் சமயி ஆகின்றான். என்றும், யார் ஒருவன் யான் பெற்ற

இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணத் தலைப்படுகின்றானோ அன்றே அவனது வாழ்வும் மலர்கின்றது, மணம் வீசுகின்றது என்றும் எமது இன்ப வாழ்வுக்கு வழிகாட்டுவதுதான் எமது சைவ வாழ்வு ஆதலால் எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதே அன்றி வேறொன்றும் அறியேன் பராபரமே என்று பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவதை நினைந்து நாமும் எல்லோரும் இன்புற்று வழிகோலும், நெறிகாட்டும் சைவவாழ்வு வாழ்வோமாக.

நன்றி

*ச. சிவமைந்தன்*

*தரம் 7*

மனிதன் நெற்றியில் திருநீறு அணிந்து சந்தன சாந்த திலகமிடுவது ஆத்மாவை குளிர்மைப்படுத்தவே ஆகும். இத்தகைய ஆத்மாவானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்து என இராஜயோகம் வரையறுக்கின்றது. அதாவது ஆத்மாவானது மனம், புத்தி, சமஸ்காரம் (பழக்கவழக்கம்) என பிரிக்கப்பட்டுள்ளது. ஆத்மாவில் எண்ணங்கள் தோன்றி மூளையின் மூலமாக பரவி செயலாற்றுகின்றது என்றும், இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவம் செய்வது ஆத்மாவே என்றும், தீர்மானமானது புத்தியை அடிப்படையாக கொண்டது எனினும் மனம் புத்தி ஆத்மாவிலிருந்து தனிப்பட்டதல்ல, ஆனால் இன்று இதை மறந்த மனிதன் தன்னை உடலாகவும், ஆண், பெண், வாலிபன், வயோதிபன் என எண்ணும் தேகாபிமானமே துன்பங்கள் அனைத்திற்கும் காரணம் என இராஜஜோகிகள் குறிப்பிடுகின்றனர்.

விஞ்ஞானிகள் ஒரு விஷயத்தை, அதாவது ராஜயோகம் விஞ் ஞானத்தின் கேள்விகளுக்குத் திருப்தியாக ஈடுகொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்பி உலக ஆன்மீக பல்கலைகக்கழக தலைவி தாதி ஜானகி அனேக விஞ்ஞான பரிசோதனைகட்கு உட்படுத்தப்பட்டார். மிக நுட்பமான ஈஈஜி கருவிகள் மூலம் லாங்கியேட்டர் இன்ஸ்டியுட்டிலும், மற்ற பரிசோதனை கூடங்களிலும் பரிசோதனைகள் மருத்துவ துறையில் கடினமான களைப்படையச் செய்யும் மனோரீதியான, உடல் ரீதியான வேலை கட்கிடையே நடத்தப்பட்டன. தாதி ஜானகி இத்தனை பரிசோதனைகட்கு மத்தியில் நியூரோ பிஸிக்ஸ் என்ற நரம்பியல் சட்டங்களை மீறி, தொடர்ந்து டெல்டா அலை என்ற அதிர்வுகளை அவரால் ஒரே சீராக கொடுக்க முடிந்தது. அதனால் அவருக்கு உலகில் சிறந்த சமநிலை பெற்ற மனம் படைத்தவர் என்ற அங்கீகாரம் கிடைத்தது.

பரிசோதனையின் பின் அவர் கருத்து தெரிவிக்கையில், நான் உடல் என்பதை மறந்து அதாவது உடலுணர்விலிருந்து விலகி ஓம் சாந்தி எனும் சுலோகத்தை கடைப்பிடித்ததே காரணம் என்கிறார். ஓம் சாந்தி என்பதன் பொருள் நான் ஓர் அமைதியான ஆத்மா என்பதாகும். இவரது ஆத்ம உணர்வு பயிற்சியே இவரை உலகில் சிறந்த சமநிலை மிக்க மனம் படைத்தவர் எனும் நிலைக்கு வித்திட்டது என்றால் அது மிகையாகாது.

ஆகவே மனிதர்களாகிய நாம் உடல் எனும் எண்ணவலையிலிருந்து மீண்டு எம்மை ஆத்மாவாக அதாவது உயிர் - Soul என உணர்வோமாக. நான் எவ்வாறு ஆத்மாவாக விளங்குகின்றேனோ எனைப் போன்றே உலகில் உள்ள மற்றைய அனைவரும் ஆத்மாக்களே. அனைவரும் வானில் உள்ள நட்சத்திரம் போன்று பிரகாச ஆத்மாக்களே. இதில் உடலழகென்ன, கட்டமைப்பென்ன, நிறமென்ன, வயதென்ன, பாலென்ன நாம் அனைவரும் பரமாத்மாவுடைய குழந்தைகளாவோம். இறைவனின் குழந்தைகளாகிய நாம் ஒருவருக்கொருவர் சகோதர, சகோதரிகளாவோம். "ஓ மனிதனே உனைப் போன்றே ஏனையவர்களையும் ஆத்மாவாகவும், கடவுளின் குழந்தையாகவும் கருதி சகோதர பாசத்துடன் உறவாடி உலகை ஒரு குடும்பமாக எண்ணி இன்பமாய் வாழ கற்றுக்கொள்ளாயோ" என கண்ணீர் கலந்த ஏக்கத்துடன் வினவுகிறேன்?"

சில வேளைகளில் புன்னகையானது
பாலைவனத்தில் ஒரு துளி நீரைப் போன்றதாகின்றது.

அ. அருஜுனா
A/L - 2009 (கலைப்பிரிவு)

# எழுகிறதோர் புரட்சிக்குரல்!

1

கோயிலை இடிப்பவர்களே!
சிலையை தகர்ப்பவர்களே!
தேவாலயத்தை எரிப்பவர்களே!
உங்களின் முன்னே
எழுகிறது ஓர்
புரட்சிக் குரல்!

2

கோபுரத்தை எழுப்பியதில்
ஓர் சிங்களவனின்
பங்கு இல்லையா?
விகாரை கட்டியதில் ஓர்
கிறிஸ்தவக் கொத்தன்
இருந்ததில்லையா?
தேவாலயத்திற்கு காணிக்கை
ஓர் இந்து
கொடுக்காமல்
இருந்திருப்பானா?

3

மாற்று மதச் சகோதரனின்
பங்களிப்பில்லாமல் ஒரு
மணல் மேட்டை கூட
இந்நாட்டில்
உருவாக்கியிருக்க முடியாது!

4

நீ கட்டிய கட்டடத்தை தானே
நீயே இடித்துக் கொள்கிறாய்!
நீ சேர்த்த
கல்லையும் மண்ணையும்
நீயே பிரித்தெடுக்கின்றாய்,
கடவுளையல்லவே...!

5

துண்டு நிலத்தில்
தொழுகை நடத்தும்
இஸ்லாமியனுமிருக்கின்றான்..
பரமபதத்தை மனத்தால்
பூஜிக்கும் இந்துவுமிருக்கின்றான்..
கர்த்தரின் வழியில்
கண்ணியத்தை காக்கும்
கிறிஸ்தவனுமிருக்கின்றான்...
உங்கள் இரத்த வெறிக்கு
பலியாவது
இந்த அப்பாவிகள் தானா?

6

எந்த மதம் உனக்கு
இடிக்கவும்...
எரிக்கவும்...
கற்றுத்தந்தது?
அஸ்திவாரமே இல்லாமல்

எந்தக் கட்டிடத்தை
நீ கட்டப் போகிறாய்?
அடிப்படையே தெரியாத நீ
எந்த மதத்திலிருக்கிறாய்?

7

பட்டையும் நாமமும்...
போட்டுக் கொள்வதால் நீ
இந்துவாகிவிட முடியாது
குருசு போட்டுக்கொண்டதால்...
நீ கிறிஸ்தவனாகிவிடமுடியாது
சீவுறு அணிந்து மட்டும் நீ
பௌத்தனாகிவிட முடியாது
தொப்பி அணிந்து கொண்டதால்
நீ இஸ்லாமியனாகிவிடமுடியாது..

8

மனிதத்தை நேசிக்கின்ற
போது தான்,
இது வெல்லாமாக
நீ மாற முடியும்!

9

பிறைக்கொடியை பறக்கவிட்டு
இஸ்லாமியன் என
காட்டிக்கொள்ளாமல்...
காவிக் கொடியை கட்டி
இந்து என
காட்டிக்கொள்ளாமல்..
வெறும் கடமைக்காக
பைபிளைத் தூக்கும்
கிறிஸ்தவனாக இல்லாமல்...

10

அடிப்படையிலிருந்து
உன்மதத்தை துவங்கு!
இன்னொரு ஆலயத்தை
இடித்துவிட்டு
தனக்கொரு ஆலயம் கட்ட
எந்தக்கடவுளும் விரும்பமாட்டான்!
மீறி விரும்பினால்...
தவறேயில்லை...
கடவுளை இடியுங்கள்!

11

அதிகமாய் செத்தது
இந்துவா? கிறிஸ்தவனா?
பௌத்தனா?
பட்டிமன்றம் வைக்கும் முன்..
புரிந்து கொள்ளுங்கள்!
அதிதகமாய் செத்தது
மனிதம் தான்!
உன்மதத்தை கற்று தீர்க்கவே,
ஓராயுள் வேண்டுமே!
இதில் எந்த மதத்தை
இடித்து தகர்க்க
உனக்கு நேரமிருக்கும்?

*ஆக்கம்:*

இ. ஜெயமாறன்
A/L 2009 (கணிதம்)
யா/சென்ஜோண்ஸ் கல்லூரி.

# இந்து மதமும் சாதிகளும்

இந்து சமய வரலாற்றின் மிக ஆரம்பகாலத்தில் இந்து சமூகமானது பல நிலைகளாக பகுக்கப்பட்டு அமைந்திருந்ததை விளக்கும் வகையில் சாதி முறைமையானது அமைந்திருந்தது. செய்தொழில் அடிப்படையிலே பழங்குடி மக்களிடம் சாதி முறை உருவானது. இது மனிதனால் உருவாக்கப்பட்டதே தவிர தெய்வீக மர்மமாக அமைந்து விடவில்லை. முதன்முதலாக 'புருசசூக்தம்' என்ற நூலில் ஜாதிமுறை அமைப்பு பற்றி குறிப்படப்பட்டுள்ளது. ஒரு சமூகத்தின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் வகையில பணியாற்றி வரக்கூடிய பல பிரிவுகளுடனும் கூடிய னவாக சமூகங்கள் அனைத்தும் அமைந்து காணப்படுகின்றன. இவ்வாறு சாதி அமைப்புகள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது.

முதல் பிரிவாக பண்பாட்டின் வளர்ச்சிக்காகவும் ஆன்மீகத்தின் உயர்வுக்காக ஈடுபடுபவர்களையும், இரண்டாம் பிரிவாக போர்த்துறையிலும் அரசியலிலும் ஈடுபடுபவர்களையும், மூன்றாம் பிரிவாக பொருளாதார துறையிலும் வர்த்தகத்திலும் ஈடுபடுபவர்களையும், நான்காவது பிரிவாக தேர்ச்சி பெறாத தொழிலாளர்களையும் உழைப்பாளிகளையும் கொண்டதாக இந்த நான்கு பிரிவுகளும் வகையீடு செய்யப்பட்டுள்ளது. சாதிப் பிரிவுகள் பற்றி ராதா கிருஷ்ணன் அவர்கள் ''சாதிப்பிரிவு என்பது நாட்டுக்குத் தேவையான நான்கு அம்சங்களை கொண்டுள்ளது என குறிப்பட்டுள்ளார். இந் நான்கு சாதிகளும் பிற பிரிவுகளின் தலையீடின்றி ஒவ்வொரு பிரிவும் சுதந்திரமாகவும் சுயேட்சையாகவும் இயங்குவதற்கும் தம்முடைய குறிக்கோள்கள், இலட்சியங்களை நோக்கி பயணிப்பதற்குமுரிய வழி வகைகள் வேத நூல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்து சமயத்தின் பிரதான அம்சமாகிய வாரணாசிம தர்மம் இது பற்றி சிறப்பாக குறிப்பிடுகின்றது. இதில் ஒவ்வொரு சாதிப் பிரிவினருக்குமுரிய கடமைகள் வலியுறுத்தப் பட்டுள்ளன.

இந்து மதம் பிரித்த பிரிவுகள் தொழில் நோக்கம் கொண்டவை. தீண்டாமை என்பதும் தாழ்ந்தவன் என்பதும் முதற்பிரிவினர்களால் உருவாக்கப்பட்டதாகும். இந்தவகையில் நாடார், முதலியார், நாயக்கர், செட்டியார் போன்ற சாதிப்பெயர்கள் அந்த நாளில் ஒவ்வொரு துறையிற் பங்காளிகளாக இருந்தவர்கள் தங்களுக்கு இட்டுக் கொண்ட பட்டப் பெயர்களே ஆகும். இந்த சாதிப் பெயர் எதனையும் இந்து வேதங்களிற் காணமுடியாது.

இன்று சாதிகளை அடிப்படையாகக் கொண்ட அடக்குமுறைகளும் ஒடுக்கு முறைகளும் மலிந்து விட்டன. இதனால் இன்றைய காலகட்டத்தில் சாதி முறைமை அவசியம்தானா? என்ற வினா எழுகின்றது. இந்து மதத்தின்படி நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள், பிறப்பால் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். உயர்குலத்தில் பிறந்ததால் ஒருவன் உயர்வாகவும் தாழ்குலத்தில் பிறந்த ஒருவன் தாழ்ந்தவனாகவும் பிறப்பால் ஒரு காலமும் நிட்சயிக்கப்பட கூடாது. இன்று இந்தியாவில் திருப்பதி வெங்கடேஸ்வர பெருமானை ஒரு குறிப்பிட்ட பிரிவினரே அருகில் சென்று தரிசிக்க முடியும். இம் முறை மாற்றியமைக்கப்படவேண்டும். ஒருவன் உயர் சாதியாக இருந்தாலும் சரி, தாழ்ந்த சாதியாக இருந்தாலும் சரி அவனது உள்ளம் தூய்மையாக இருப்பின் அவனுள் நிச்சயம் இறைவன் வசிப்பான். இவ்வகையில் இருவரும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள்.

உயர்மட்ட சாதியினர் தமக்குள்ள செல்வாக்கையும் அதிகாரத் தையும் பயன்படுத்தி சுரண்டல்களிலும் குற்றங்களிலும் இன்று ஈடுபடுவதை பரவலாக காணமுடிகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக ஜெயந்திரர் சுவாமி கைதுசெய்யப்பட்டமையை குறிப்பிடலாம். மேலும் இச் சாதி அமைப்பே ஒரு வகையில் இந்துக்கள் பிற மதங்களை நாடி செல்ல வழிவகுத்திருந்தது எனலாம். கீழ்ச்சாதி மக்கள் தொடர்ந்தும் புறக் கணிக்கப்பட்டு வந்தமையும் சமூகத்தில் அவர்களது தாழ்நிலையும் வறுமையும் அவர்களை மதமாற்றத்திற்கு தூண்டியிருந்தன.

சாதிகள் பற்றி புரட்சிக் கவிஞன் பாரதி பின்வருமாறு பாடுகின்றான்,

**''சாதிகள் இல்லையடி பாப்பா, - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"**

எனவே முடிவாக, சாதி அமைப்பால் இந்து மதத்திற்கு ஏற்பட்ட களங்கத்தை நாம் மதத்தை கொண்டே துடைக்க முயற்சித்தல் வேண்டும். என்று சாதிகள் எமது மனங்களிலிருந்து முற்றாக ஒழிக்கப்படுகின்றனவோ அன்றே நாம் ஒற்றுமையான, ஸ்திரமான சமூகத்தை கட்டி எழுப்ப முடியும்.

**சீ. கௌதமன்**
A/L (கலைப்பிரிவு) 2008.

## வாழ்வில் சைவநெறி

மதங்கள் மனிதன் இறைவனை நோக்கிச் செல்ல உதவுகின்றன. ஒருவன் தனது தாய் தந்தையரை பின்பற்றும் போதுதான் நன்மையடைய முடியும். நாம் ஒரு வழியில் சென்றால் தான் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடையலாம். அது போல ஒரு சமயத்தின் நெறிமுறைகளை பின்பற்றும்போது தான் நன்மையடையமுடியும். சமய நெறிமுறையானது மனிதனது விலங்குப் பண்பினை நீக்கி, மனிதப் பண்பினை வளர்த்து, தெய்வத்தன்மையினை ஏற் படுத்துவதாகும். வாழ்வுக்கு சமய நம்பிக்கை ஒரு பற்றுக்கோடாக அமைகிறது. சமயத்தின் அடைப்படைத் தத்துவம் அன்பு நெறியாகும். சைவம் அன்பையும் அறத்தையும் போற்றுகிறது. இதனையே திருமூலர் அன்பே சிவம் எனக் கூறியுள்ளார்.

*திருச்சிற்றம்பலம்.*

**"அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமமான தாரு மறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்**
**அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"**

*திருச்சிற்றம்பலம்.*

'மனத்தின் கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்றும் 'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்றும் திருக்குறள் கூறுகிறது.

எங்கள் சமய நெறி அன்பின் வடிவமாக இறைவனைக் காண்கிறது. இந்த அன்பை வளர்ப்பதற்காகவே, வாழ்க்கையை இல்லறம் துறவறம் என்ற இரு நிலைகளில் வைத்து நெறிப்படுத்தப்படுகிறது. இந்து சமயி ஒவ்வொருவரும் வேதங்களின் அனாதியான உபநிடதம். அதில் நான்கு நிலைகளில் நின்று ஒருவனது ஒழுக்க நெறி எவ்வாறு அமைதல் வேண்டும் என வகுத்துக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வாழ்வோரே ஆன்ம ஈடேற்றத் தைப் பெறுவர்.

முதலாவது நிலை: பிரமச்சரியம் (மாணவப் பருவம்) இப்பருவத்தில் இல்லறவாழ்க்கைக்கு பயனுள்ளதான கல்வியைக் கற்கவேண்டும். இரண்

டாவது நிலை கிருகஸ்தம் (இல்லற நிலை) இதில் தான் பெற்ற கல்வியின் துணையுடன் இல்லற வாழ்வினை அறப் பண்புடன் நடாத்துதல் வேண்டும். மூன்றாவது நிலை வானப்பிரஸ்தம் (ஆரணியம்) இந்நிலையில் பற்றற்று கடமைகளை ஆற்றல் வேண்டும்.

தாமரை இலை எவ்வாறு தண்ணீரில் இருந்துகொண்டு அதனுடன் சேராது இருக்குமோ அதே போன்று உலகியலில் வாழ்ந்துகொண்டு அதனுடன் சேராமல் வாழுதல் வேண்டும். ஞான நூல்களை கற்குமிடத்து உள்ளம் பற்றற்ற நிலையில் பக்குவமடையும்.

இது நான்காவது நிலையான சந்நியாசம். (துறவு) நிலைக்கு இட்டுச் செல்லும். இந்நிலையில் எமது பாரத்தை இறைவன் பாதத்தில் அர்ப்பணித்து யாவும் இறைவன் செயல் என செயற்படுவோமாகில் ஒருவன் ஆன்ம ஈடேற்றத்தைப் பெற வாய்ப்புண்டாகும். சமய நெறியுடனான வாழ்க்கையைத்தான் எமது மகான்களும் பெரியோர்களும் வாழ்ந்துகாட்டியுள்ளனர்.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். நித்தியமானவன். இறைவனைப்போல் உயிரும் "என்றுளை நீ, அன்றுளம் நாம்" என்கிறார்.

உலகியல் அனுபவங்களில் அழுந்தி உலகப்பொருட்களை சார்ந்திருப்பது பசுவாகிய ஆன்மாவின் இயல்பு. பாசம் நீங்கி முத்தி அல்லது விடுதலை அடைந்தபோது அது சிவன் அருளில் தோய்ந்து சிவத்தை சார்ந்து நிற்கும்.

அன்பையும் அறத்தையும் வாழ்வில் எத்தகைய துன்பம் வந்தபோதிலும் வளர்த்து ஒழுக்கம் வழுவாது வாழ்பவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வைக்கப்படுவார்கள் என உணர்வோமாக.

**ச. கௌமாறன்**
*தரம் 9 A*

# சைவநாற்பாதங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் மக்கள்பெற வேண்டிய உறுதிப்பொருள் நான்குமாம். இவை தர்மம், அதர்மம், காமம், மோட்சம் எனவும் கூறப்படும். அறத்துப்பால்; பொருட்பால்; காமத்துப்பால் என வள்ளுவர் மூன்றாக வகுத்துள்ளார். அறத்துப் பாலுக்கே தலைமை தந்தார். அதனுள் வீடும் அடங்கக் காட்டினார். அறம் எனப்பட்டதை இல்லறம், துறவறம் என இரண்டாக்கினார். அன்பு இல்லறத்தின் உயிர் நிலை அது வளர்ந்து முதிர்ந்து அருளாகிறது. அதுவே, இறுதியான வீட்டின்பத்தின் வேர். இந்தப்படி முறையிலே மனித வாழ்வு மலர்ந்து கனிவதாகும்.

பிறவித் துன்பத்தை அறிந்து, பிறவாமையாகிய பேரின்ப நாட்டம் கொண்டவர் அனுசரிக்க வேண்டிய படிமுறையான வழியே சைவசமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞான மெனப்படும். நாற்பாதங்கள். இவை தாச மார்க்கம் சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவை யாகும். இவை ஒவ்வொன்றும் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நான்காக வகைப்படுத்திப் பதினாறு படிகளாக விரிவடையும். மேலும் அவை ஒவ்வொன்றும் உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இவ்விரண்டாக நோக்க, முப்பத்திரண்டாகக் கொள்ளப்படும்.

உபாய மார்க்கம் என்பது எம்மைப் போல் உலக வாழ்வில் நின்றபடி இறையருளை வேண்டி ஏதாவதொரு வழிமுறையை பின்பற்றி ஒழுகுதல். உண்மை மார்க்கம் என்பது உலகப்பற்றை மெல்ல மெல்ல விட்டவர்கள் அம்மார்க்கங்களிலே தமக் கேற்ற ஒரு வழியைப் பின்பற்றி இறையருளையே நாடி நின்று, வேறு பயன் கருதாது ஒழுகுவதாகும்.

இவ்வழிகளிலே ஒழுகி உய்திபெற்ற பெரியார் சரிதைகளைக் கூறி, எமக்கு நல்வழி காட்டுவதே பெரியபுராணம். இவற்றில் நின்று ஒழுகும் முறை எது என்பதையும் நியதி நியமங்களையும் சாத்திரங்கள் கூறுகின்றன. மலை உச்சியை அடைய விரும்புவோன் கீழ் நிலையில் உள்ள அடிவாரத்தையடைந்து படிப்படியாக ஏறிச் செல்லவேண்டும். அப்போதும் அபாயமற்ற நல்ல வழியில் எம்மை அழைத்துச் செல்லப் பயிற்சி பெற்ற வழிகாட்டிகளும் அவ்வப்போது உதவவரவேண்டும். அல்லாவிடின் இலக்கை அடைவதரிது; வழிதவறிப்போக நேரிடும்.

**சரியை:**

எவரும் செய்யக்கூடிய ஆரம்பமுயற்சி இது வென்பர். எதற்கும் தூய தெய்வபக்தியும் இறையச்சமும் துணை நிற்கவேண்டும். அவை நம்மை வழி பிழையாது நடாத்தும். முன்னோர் காட்டிய வழிநிற்போர் உரையையும் கருத்திற் கொள்வது அவசியம். அன்பின் துணையோடு உடம்பினாற் செய்யும் இறைபணி எல்லாம் சரியை எனப்படும். அவற்றிலே சிவாலயத்தை அலகிடல், மெழுகுதல், கழுவுதல், பூஞ்சோலை அமைத்தல், பூ எடுத்துக் கொடுத்தல், மாலைகட்டுதல், பூசைதிரவியம் கொடுத்தல், உபகரணங்களை துலக்கிச் சுத்தம் செய்தல், விளக்கிடல், என்பவற்றை செய்து கொடுத்தல் இவை எண்ணில்லாதன. இவற்றைச் செய்பவர்களுக்கு வேண்டிய உபகரணம் கொடுத்தல், அவர்களைச் சிவனடியாராக வழி படுதல், அடியார்க்கு வேண்டுவன தருதல், அன்னதானம், முதலியன செய்தல் என்பன.

இத்தொண்டுகளைச் செய்தவரும் வற்புறுத்தியவரும் திருநாவுக் கரசுநாயனார், அப்பூதியடிகள், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், அதிபத்தநாயனார், கண்ணப்ப நாயனார், மூர்த்திநாயனார் எனப்பலர். இவர்கள் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாடல்களிலே போற்றப் பெற்றவர்கள்.

**கிரியை:**

கிரியை என்பது மந்திர தந்திரங்களைக் குருமூலமாக அறிந்து, சமயம் விசேடம் நிருவாணம் ஆச்சாரியாபிசேகம் எனும் தீட்சைகளைப் பெற்றவர்கள் மேற்கொள்ளும் வழிபாட்டுமுறை. விநாயகர், அம்பிகை, சுப்பிரமணியர், வைரவர் முதலிய உருவத்திருமேனிகளுக்குப் பூசனைபுரிவர். இதில் தம் பொருட்டுத் தம்மளவிலே வழிபடுவது ஆன்மார்த்த பூசை. பிறர் பொருட் டாகவும் ஆலயங்களிலே பூசைபுரிவது பரார்த்தபூசை எனப்படும். விசேடதீட்சை பெற்றவர் சிவலிங்கம் வரை எல்லா மூர்த்திகளுக்கும் ஆன்மார்த்த பூசை புரியலாம். சிவாலயங்களிலே செய்யப்படும் பரார்த்த பூசை, விழா, கும்பாபிஷேகம் முதலியனவற்றை ஆசாரிய தீட்சை பெற்றவர் மாத்திரமே செய்வதற்குரியர். கிரியை வழிபாட்டில் நின்றோர் சண்டேசுவரர் முதலானோர் திருஞானசம்பந்தர் ஞானத்திற் கிரியா மார்க்கத்தில் நின்றவர்.

**யோகம்:**

முன்னைய இரண்டிலும் உயர்ந்தநிலை இது. இதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரனை, தியானம், சமாதி எனும் எட்டுறுப்புகள் உண்டு. யோகநிலை பயின்றவர்களிடம் இந்த எண்வகை உறுப்பிலும் பயிற்சி பெற்றுப் படிப்படியாகத் தேறியவரே. அதனை அனுசரிக்கமுடியும் அட்டாங்கயோகம் எனும் இதனை யோகியரிடம் பயின்ற திடசித்தமுடையவர்களே அநுட்டித்து மேலேறமுடியும். நாம் கற்றும் கேட்டும் பெறும் அறிவு போதாது. கலா நிதிப்பட்டம் பெறுவோர், நல்லாசிரியரின் துணையோடு ஆய்வுகளை செய்து சாதனை படைப்பதுபோன்றது. யோகிகள், திருமூலர், பெருமிழலைக்குரும்பர், சேரமான் பெருமான், சுந்தரர் முதலானோர் யோகமார்க்கத்தில் நின்றோர் ஆவார்.

**ஞானம்:**

இது சொல்லிறந்தது என்பர். வீடு என்பதும் அத்தன்மையதே. அதனாலே இவற்றினியல்பை இப்படி என எடுத்துச் சொல்வார். முன்கூறிய படிமுறைகளிலே நின்றொழுகிப் பக்குவம் பெற்றவர்க்கு இறைவனே குருவடிவாக வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானியராக்குவர். மாணிக் கவாசகர், மெய்கண்டார், இவர்களுக்குக் குரு உபதேசம் கிடைத்தமை இவ்வாறேயாகும். அருணகிரிநாதர் முதலியோருக்கு முருகனே குருவாய் உபதேசம் செய்தார். இவ்வாறு ஞானிகள்; சித்தர்கள என உலகில் வாழ்ந்த பெரியார் கதைகளும் அற்புதங்களும் கூறப்படுகின்றன. சரியாபாதத்தில் வழிபட்டவர்களுக்கு சாலோகமுத்தி, சிவலோகம், கிரியா பாதத்தில் வழிபட்டவர்களுக்கு சாமீபமுத்தி, சிவ சம்பத்திருத்தல், யோகபாதத்தில் வழிபட்டவர்களுக்கு சாரூபமுத்தி, சிவரூபம் பெறுதல், ஞானபாதத்தில் வழிபட்டவர்களுக்கு சாயுச்சியமுத்தி, சிவயோகி ஒன்றுதல்.

முன்னைய பிறவிகளிலே செய்த தவப்பயனாக இப்படி முறைகளிலே நின்று ஒழுகாமலே சிலருக்குச் சிவனருளாலே பூரண ஞானநிலை இளமையிலே தோன்றிப் பிரகாசிப்பதும் உண்டு. மெய்கண்டார், திரு ஞானசம்பந்தர், கண்ணப்பநாயனார், சண்டேசுவரர் போன்றவர்கள் இவ் வாறானவர்கள்.

**தவச்செல்வன் கதிரைமலைநாதன்**
வர்த்தகம் A/L 2009.

# இந்து மன்றம் - 2007

| | | |
|---|---|---|
| போசகர் | : | வண.ந.ஜே. ஞானப்பொன்ராஜா |
| உபபோசகர் | : | திரு. வே. யுகபாலசிங்கம் |
| தலைவர் | : | ச. கார்த்திக் |
| செயலாளர் | : | செ. பார்த்தீபன் |
| உபதலைவர் | : | க. சிவச்செல்வன் |
| உபசெயலாளர் | : | ம. கஜீவ்ராஜ் |
| பொருளாளர் | : | செ. கோகுலன் |
| பத்திராதிபர்கள் | : | க. கௌரிசங்கர் |
| | | சி. ஜவிதன் |

செயற்குழு உறுப்பினர்கள்:-

| | |
|---|---|
| செல்வன் | ராம்ராஜ் |
| செல்வன் | சுதாகர் |
| செல்வன் | சிவமித்திரன் |
| செல்வன் | தனஞ்சயன் |
| செல்வன் | கீர்த்தன சங்கர் |
| செல்வன் | கஜானன் |
| செல்வன் | நிரோசன் |
| செல்வன் | விஸ்வநாத் |
| செல்வன் | விஸ்பரூபன் |
| செல்வன் | பிரசாத் |
| செல்வன் | சுமந்திரன் |

# கீதாசாரம்

* எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
* எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
* எது நடக்க இருக்கிறதோ,
  அதுவும் நன்றாகவே நடக்கும்.
* உன்னுடையது எதை இழந்தாய்?
  எதற்காக நீ அழுகிறாய்?
* எதை நீ கொண்டு வந்தாய்,
  அதை நீ இழப்பதற்கு?
* எதை நீ படைத்திருந்தாய்,
  அது வீணாவதற்கு?
* எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
  அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
* எதை கொடுத்தாயோ,
  அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
* எது இன்று உன்னுடையதோ,
  அது நாளை மற்றொருவருடையதாகிறது.
* மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

அன்னை அச்சகம் குருநகர் யாழ்ப்பாணம்.